www.samugasinthanai.in



டாக்டர் கலைஞர் – சுதந்திர இந்தியாவின் ஒரு சிறந்த சமுதாய சிற்பி

அரசியலுக்கு அப்பாற்பட்ட டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் இலக்கியத்திற்கு உயிரூட்டியவர்; தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் 69% இட ஒதுக்கீடு செய்து சட்டமியற்றியவர். மேற்கண்டவற்றிற்கும் அப்பாற்பட்டு–

மேற்கு தமிழகத்தில் பெரும்பான்மையாக இருக்கும் கொங்குவேளிர் சமூகத்தினர் முற்பட்ட சமுதாயமாக (Forward Community) இருந்தவர்களை 1975–ல் அரசாணை இயற்றி பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக மாற்றியவர் டாக்டர் கலைஞர்.




மேலும் 1989ம் ஆண்டு 107/108 பிற்பட்ட சமுதாயத்தினரை, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக மாற்றினார்கள். அதற்காக தமிழகத்தின் சமூக நீதிப்போராளி டாக்டர் அய்யா அவர்கள் ஒரு நீண்ட போராட்டத்தை நடத்தி– தனது வாழ்க்கையின் பல வருடங்களை அற்பணித்து மற்றும் பல உயிர்களை(21) போராட்டத்தில் இழக்க வேண்டியிருந்தது.

மேற்கண்ட இரு சமூகநீதி பாதுகாப்பால் வருடந்தோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் கல்விப் பயணம் மற்றும் வேலைதேடும் படலத்தை நம்பிக்கையுடன் தொடங்குகின்றனர்.

தன்னலம் பாராமல் சமூக நீதிக்காக சட்டமியற்றிய சமூக நீதி பாதுகாவலராகிய டாக்டர் கலைஞர் அவர்களை–

நிலம் என்பதா!
நீர் என்பதா!!
காற்றென்பதா !!!
(குறிப்பு: Global Commons – நிலம், நீர், ஆகாயம், காற்று...)

இந்த சமூகப்புரட்சியின் எடுத்துக்காட்டாக அரசு இரண்டு தூண்களை உரிய இடத்தில் சென்னையில் எழுப்ப வேண்டும். அவை வருங்கால சந்ததியினர் தாங்கள் நடந்து செல்லும் பாதையை அறிந்து கொள்ள உதவும்.

www.samugasinthanai.in